நகராட்சி அலுவலகம்
பொன்னேரி.

கூட்டம் எண். 03 / 2025 நாள்: 23.05.2025

# சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 28 .05.2025 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரி நகராட்சி

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் மார்ச் 2025 மற்றும் ஏப்ரல் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பதிவுசெய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்:** 678 **நாள்:** 28.05.2025

**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.**

**பொருள் எண் 2**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் மார்ச் 2025 மற்றும் ஏப்ரல் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பதிவுசெய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 679 **நாள்:** 28.05.2025

**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.**

**பொருள் எண் 3**

பொன்னேரி நகராட்சி ஆணையரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN 18 BK 4856 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.20,138/- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 659/2021/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 680** **நாள்: 28.05.2025**

**தீர்மானம்:** BOLERO TN 18 BK 4856 தொடர் பராமரிப்பு செய்திட அதற்கான செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 4**

பொன்னேரி நகராட்சி பொறியாளரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN 18 BQ 2035 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.24,484/- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்புவாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 659/2021/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 681** **நாள் : 28.05.2025**

**தீர்மானம்:** BOLERO TN 18 BQ 2035 தொடர் பராமரிப்பு செய்திட தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண் 5</u>**

பொன்னேரி நகராட்சி நகர்மன்றத் தலைவர் அலுவலக பயன்பாட்டில் உள்ள SCORPIO வாகனம் TN 18 BM 5937 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.5,019/- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலமாக பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 659/2021/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 682** **நாள்: 28.05.2025**

**தீர்மானம்** : SCORPIO TN 18 BM 5937 தொடர் பராமரிப்பு செய்திட தலைவரின் முன் அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண் 6</u>**

பொன்னேரி நகராட்சியில் கீழ்கண்ட விவரப்படியான தெருக்களுக்கு தெருமின் விளக்குகள் உபயோகத்திற்கு என தனியாக மின் தொடர் இணைப்பு இல்லாததால் தெரு மின் விளக்குகள் அமைக்க இயலவில்லை. எனவே இதற்கென பிரத்யேக மின் வயர்கள் மூலம் மின் தொடர் இணைப்பு வழங்கிட வேண்டி உதவி செயற்பொறியாளர் TNEB பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் கீழ்கண்டவாறு கேட்பு வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | 19 | நண்பர்கள் தெரு | 25640/- |
| 2 | 21 | பர்மா நகர் | 88720/- |
| 3 | 24 | நக்கீரன் தெரு NGO நகர் | 112100/- |
| 4 | 25 | பி.ஆர்.கே. நகர் | 160530/- |
| 5 | 21 | ஜெயம் நகர் | 38380/- |
| 6 | 24 | கண்ணதாசன் தெரு | 25940/- |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொதுநிதியில் இருந்து செலவினம் நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 262/2022/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 683** **நாள்: 28.05.2025**

**தீர்மானம்** : தெரு மின் விளக்குகள் அமைக்க பிரத்யேக மின் வயர்கள் மூலம் மின் தொடர் இணைப்பு வழங்கிட வேண்டி கேட்பு வரப்பெற்றுள்தை தொடர்ந்து செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 7**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.O திட்டம் மற்றும் பள்ளிகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் கழிப்பறைகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்குமாறு உதவி செயற்பொறியாளர் TNEB, பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் கீழ்கண்டவாறு கேட்பு வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | 1 | நரிகுறவர் காலனி | 4550/- |
| 2 | 4 | சுந்தர்ராஜ் முதல் தெரு | 4550/- |
| 3 | 8 | புளியந்தோப்பு | 4550/- |
| 4 | 25 | கண்ணபிரான் தெரு | 4550/- |
| 5 | 26 | வேண்பாக்கம் பள்ளம் | 4550/- |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 262/2022/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 684 **நாள்: 28.05.2025**

**தீர்மானம்**: **wd** 1,4,8,25,26 கட்டப்பட்டு வரும் கழிப்பறைகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்க தலைவரின் முன் அனுமதி பெற்று பொதுநிதியில் செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 8**

திருவள்ளூர்மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தைவளர்ச்சி திட்டத்தின் கீழ் பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட அங்கன்வாடி மையங்களில் சொந்த அரசு கட்டிடங்களில் இயங்கும் 5 மையங்களுக்கு ரூ.36,000/- மதிப்பீட்டில் புதிய குழந்தை நேய கழிவறை கட்டுவதற்கு இவ்வலுவலக கடித எண் 931/2024/இ1 நாள் 18.03.2025 ன்படி 09.04.2025 அன்று மறுஒப்பந்தபுள்ளி கோரியதில் ஒப்பந்தபுள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| | **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்** | | | |
| 1 | வார்டு எண் 21 கும்மங்கலம் அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | ஒப்பந்தபுள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 2 | வார்டு எண் 1 குன்னமஞ்சேரி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | | |
| 3 | வார்டு எண் 16 பொன்னேரி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | | |
| 4 | வார்டு எண் 7 திருவாயர்பாடி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | | |
| 5 | வார்டு எண் 4 சின்னக்காவணம் அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | | |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்
   (ந.க.எண்931/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்:** 685 **நாள்:** 28.05.2025

**தீர்மானம்** : குழந்தை நேய கழிவறை கட்டுவதற்கு மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் பார்வையிட்டு பதிவு செய்து அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 9</u>

பொன்னேரி நகராட்சி பொதுநிதி 2024-2025ன் கீழ் ரூ102.65 இலட்சம் மதிப்பீட்டில் 20 சாலைகள் அமைத்திடும் பணிக்கு 21.03.2025 அன்று online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்திட்ட வகையில் அதற்கான கட்டணம் ரூ18,848/- வழங்குமாறு MOULIS Advertising Service Pvt. Ltd., ராயப்பேட்டை நிறுவனம் மூலம் Invoice வரப்பெற்றுள்ளது. பொதுநிதியில் இருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
   (ந.க.எண் 864/2025/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்:** 686 **நாள்:** 28.05.2025

**தீர்மானம்: பொதுநிதியில் தொகை வழங்கிட** MOULIS Advertising Service Pvt. Ltd – க்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 10**

பொன்னேரி நகராட்சி 15வது நிதிகுழு மான்ய திட்டம் (Tied & UnTied) 2023-2024ன் கீழ் ரூ106.55 இலட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார பணிகள், குடிநீர் பணிகள் மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 18.03.2025 அன்று நடைபெற்றது. ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரமாக வெளியிடப்பட்டது. விளம்பரம் வெளியிட்ட வகையில் அதற்கான கட்டணம் ரூ26,040/- வழங்குமாறு MOULIS Advertising Service Pvt. Ltd., ராயப்பேட்டை நிறுவனம் மூலம் Invoice வரப்பெற்றுள்ளது. பொதுநிதியில் இருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

   (ந.க.எண் 864/2025/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 687 நாள்: 28.05.2025**

**தீர்மானம்** : ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்திற்காக MOULIS Advertising Service Pvt. Ltd., பொதுநிதியில் இருந்து தொகை வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 11**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண்.31/44656/2005/யு1 நாள்.07.04.2025-ன் படி, பொன்னேரி வட்டம், ஆண்டார்குப்பம் கிராமத்தில் 18.04.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல அமைச்சர் அவர்களால் புதிய கட்டிடம் திறந்துவைத்தல் புதியதாக அடிக்கல் நாட்டுதல் மற்றும் பயானிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் தொடர்பாக நிகழ்வுக்கு வருகை தரும் பொதுமக்கள் மற்றும் பயனாளிகளுக்கு குடிநீர் தேவைக்காக மேடையுடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்தல், Mobile Toilet ஆகியவைகளுக்கு தேவையான அளவு நீரை நிகழ்ச்சி நிறைவு பெறும் வரை சப்ளை செய்தல் பணி அவசர அவசியம் கருதி Sec 57(7)ன் கீழ் மேற்கொண்டது, அதற்காக செலவினம் ரூ : 519544 /- பொது நிதியில் இருந்து பணி செய்திட M/S Arudhra நிறுவனம், ஆவடி , சென்னை-51 க்கு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

   ( ந.க.எண்.864/2025/இ1 )

**நகர்மன்ற தீர்மான எண்: 688 நாள்: 28.05.2025**

**தீர்மானம்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் – மக்கள் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் சம்பந்தமாக Sec 57 (7) ன் கீழ் - செலவினம் மேற்கொண்டமைக்கு பொதுநிதியில் பணி செய்திட – மன்றம் பதிவு செய்கிறது.

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2024-25-ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் 864/2024/இ1 நாள்27.03.2025 ன்படி 11.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 11, தாயுமான் செட்டி தெரு (பகுதி) மழை நீர் கால்வாய் அமைத்தல் பணி | 20.00 | திரு.ஆர். பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு |
| | | | M/s LandStar Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 4.76 % அதிகம் |
| 2 | வார்டு எண் 18, தாலுக்கா அலுவலக சாலை மழைநீர் கால்வாய் பழுது பார்த்தல் பணி | 14.50 | திரு.R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு |
| | | | M/s LandStar Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 13.62% அதிகம் |
| 3 | வார்டு எண் 3, சின்னக்காவனம் பகுதி பழவேற்காடு சாலையில் மழைநீர் கால்வாய் பழுது பார்த்தல் பணி | 5.00 | திரு.R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு |
| | | | M/s LandStar Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 8.59% அதிகம் |
| 4 | வார்டு எண் 5ல் பெரும்பேடு சாலையில் உள்ள இடுகாட்டிற்கு புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல் பணி | 2.00 | திரு.R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.06 % குறைவு |
| | | | M/s LandStar Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 31.20% அதிகம் |
| 5 | வார்டு எண் 7ல் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து 7.5 H P மோட்டார் பொருத்துதல் பணி | 4.50 | திரு. B..ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.04 % குறைவு |
| | | | M/s Sri Sai Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 1.34% அதிகம் |

### அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளித்திடலாம்.
3. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் (ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 689 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்** : 1. மன்றம் அனுமதிஅளிக்கிறது

2. குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கிறது.

3. நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**பொருள் எண் 13**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2024-25-ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் 864/2024/இ1 நாள்28.03.2025 ன்படி 15.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 12 மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் உள்ள கழிவறைக்கு சுற்று சுவர் அமைத்தல் | 6.50 | திரு. சலீம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.22 % குறைவு |
| | | | திரு. பி.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.18 % அதிகம் |
| 2 | பொன்னேரி நகராட்சி அலுவலக முதல் தளத்தில் மற்றும் தரை தளத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் தடுப்புகள் (Partition) அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணி | 9.00 | திரு. பி.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03 % குறைவு |
| | | | M/s Sri Sai Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.27 % அதிகம் |
| 3 | பொன்னேரி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்யும் பணி | 2.00 | M/s Incom Solution ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 13.60% குறைவு |
| | | | M/s Sri Lakshaya Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 12.96% அதிகம் |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருமின்விளக்கு உபயோக Meter Reder வைத்திட இரும்பு பெட்டிகள் சப்ளை செய்தல் | 1.50 | திரு. சலீம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.25% குறைவு |
| 5 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலையம், சிவன் கோயில் தெரு, நகராட்சி அலுவலகம் எதிரில் மற்றும் பர்மா நகர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு | 0.78 | M/s Ozone Technologis ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.97 % குறைவு |
| | | | M/s Vaagai Group of Services ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 7.58 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையம் பழுது நீக்கம் செய்யும் பணி (RO Plant) | | M/s Kandy Aqua Tech Private Limited ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 4.69 % குறைவு |
| 6 | நகராட்சியில் உள்ள நகரமைப்பு பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு தேவையான கணினிகள், பிரிண்டர்கள், அலமாரிகள், மேசை, நாற்காலிகள் மற்றும் கணினி பிரிவிற்கு குளிர்சாதன பெட்டி சப்ளை செய்தல் | 6.00 | திரு. பி.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| | | | M/s Sri Sai Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 4.39 % அதிகம் |
| 7 | பொன்னேரி நகராட்சியில் 6 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் தொழிநுட்ப உதவியாளர் மற்றும் மஸ்தூர் பணியாளர்களை பணியமர்த்துதல் | 8.60 | M/s Hemanth thukkaram Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04 % குறைவு |
| | | | M/s Garudan Manpower Consultant ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.87 % அதிகம் |
| | | | M/s Thulasi Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 5.01 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளித்திடலாம்.
3. மேற்படி பணிகளின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
4. வேலை வரிசை எண் 4 ஒரு விலைப்புள்ளி வந்துள்ளதை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.25 % குறைவாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 690 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: 1. மன்றம் அனுமதிஅளிக்கிறது

2. குறைந்த ஒப்பந்தபுள்ளிக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கிறது.
3. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்குகிறது.
4. வரிசை எண் 4 - மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண் 14</u>**

பொன்னேரி நகராட்சியில் தெருக்களில் மண்டிக்கிடக்கும் புதர்களை அகற்றவும், பள்ளம் மேடுகளை சரிசெய்யவும் மக்களிடமிருந்தும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்ததாலும், பொன்னேரிக்கு அருகிலுள்ள மாதவரத்துக்கு முதலமைச்சர் வருகையாலும் JCB இயந்திரத்தை வாடகைக்கு எடுத்து மேற்காண் பணி செய்ய, விலைப்புள்ளிகள் பெற்ற விவரம் கீழ்வருமாறு :

| வ.எண் | நிறுவனம் / ஒப்பந்தக்காரர் | விலைவிகிதம் / வாடகை ஒரு மணி நேரத்துக்கு ரூ. |
|---|---|---|
| 1 | A.T. சந்தானம் | 1,050 /- |
| 2 | B. ஜோதீஸ்வரன் | 950 /- |

குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.B.ஜோதீஸ்வரன் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும், அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க. எண்.365/2025/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 691 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கிறது

**<u>பொருள் எண் 15</u>**

பொன்னேரி நகராட்சியில் அரசு பள்ளிகளில் **01** முதல் **05–**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி செய்யும் M/s.ஆருத்ராகார்ப் நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் மன்ற தீர்மான எண் **577** நாள் **29.11.2024** ன்படி **31.05.2025** உடன் முடிவடைகிறது. **01.06.2025** முதல் மேலும் அதே விலையில் ஒப்பந்த காலத்தை நீட்டிக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

தமிழக அரசின் மக்கள் நல திட்டப்பணி என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எ.ண் 223/2023/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 692 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: தமிழக அரசின் மக்கள் நல திட்டப்பணி என்பதால் மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 16**

தற்போது இந்நகராட்சியில் கொசுஒழிப்பு பணி மேற்கொண்டு வரும் திருவாளர் தாட்சண்யா எண்டர்பிரைசஸ்-ன் ஒப்பந்தக்காலம் மார்ச் 2025-வுடன் முடிவடைவதால், ஏப்ரல் 2025 முதல் மார்ச் 2026 வரை ஓராண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் 24 பணியாளர்களை ஈடுபடுத்தி, மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள, ரூ.54.00 லட்சத்துக்கு நகர்மன்றம் தீர்மான எண் 657 நாள் 27.03.2025-ல் அனுமதிஅளித்துள்ளது.

2025-2026 நிதியாண்டுக்கு கொசுஒழிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்த விலைப்புள்ளி அறிவித்து ஒப்பந்ததாரரை நியமிக்க உத்தேசித்துள்ளதால், ஏப்ரல் 2025 முதல் ஜூன் 2025 வரை மூன்று மாத காலத்துக்கு **பணி நீட்டிப்பு செய்து**, **உத்தரவு கடிதம்** அனுப்பவும், நகராட்சியில் அத்தியாவசிய பணி என்பதால், நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஏப்ரல் 2025 மாதத்தில் பணியாற்றியதற்கு வரப்பெற்றுள்ள விலைப்பட்டியல் தொகை **ரூ.4,12,805**/- (ரூபாய் நான்கு லட்சத்து பனிரெண்டாயிரத்து எண்ணூற்று ஐந்து மட்டும் ) திருவாளர் தாட்சண்யா எண்டர்பிரைசஸ்-க்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அத்தியாவசியப்பணி என்பதால் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க. எண்.06/2024/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 693 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: கொசு ஒழிப்பு பணி - அத்தியாவசியப்பணி என்பதால் - ஏப்ரல் 2025 முதல் ஜூன் 2025 வரை மூன்று மாத காலத்துக்கு பணி நீட்டிப்பு செய்திட - மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 17**

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில்க்கு திரளான டெங்கு தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு வாகனம் மூலம் பயன்படுத்தப்படும் பெரிய ரக புகைச்சல் எந்திரம் 50 லிட்டர் கொள்ளளவு 2 எண்ணிக்கை வாங்க நகர்மன்ற தீர்மானம் எண் 402 நாள் 05.03.2024 ல் ரூ 8.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பீடு செய்ததில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் CRSD எண்டர்பிரைசஸ், சென்னை அவர்களிடமிருந்து புகைச்சல் எந்திரம் 50 லிட்டர் கொள்ளளவு 2 எண்ணிக்கை வாங்க உத்திரவு கடிதம் அனுப்ப நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது

**அலுவலககுறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட செலவினம் SBM 2.0 நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்
   (ந.க. எண். 1421/2023/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 694 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: மன்றம் அனுமதி அளிக்கிறது. செலவினம் SBM 2.0 – நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 18**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் ஆண் 10 பேர், பெண் 8 பேர், துப்புரவு மேற்பார்வையாளர்கள் ஆண் 4 பேர், ஓட்டுனர் ஆண் 1, மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆண் 1, பெண் 2, ஆகியோருக்கு 2025 – 2026ஆம் நிதியாண்டுக்கு தமிழக அரசாணை (நிலை எண்) 168 நாள். 16.1.2015 –ன்படி சீருடை மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது. சீருடை துணி, தையல் கூலி மற்றும் காலணிகள் அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கத்திடமிருந்து வாங்க ஆகும் தோராய செலவு ரூ.2.0 லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பணியாளர்களுக்கு அரசாணைப்படி வழங்க வேண்டியுள்ளதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 397 /2022/எச்1

**நகர்மன்ற தீர்மான எண்**: 695 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: பணியாளர்களுக்கு அரசாணைப்படி வழங்க வேண்டியுள்ளதால் மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 19**

செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் சட்ட பூர்வ ஆணை எண் 56 /2023 /TNSEC/ME1 நாள் 22.06.2023ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட காலிப்பதவியிடங்களுக்கு இடைக்காலத்தேர்தல் 2025 நடைபெறவுள்ளதை தொடர்ந்து பொன்னேரி நகராட்சியில் காலியாக உள்ள 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கான இடைக்கால தேர்தல் தொடர்பாக தயாரிக்கப்படும் வரைபடங்கள், வாக்காளர் பட்டியல் அச்சிடுதல் மற்றும் பல்வேறு தலைப்பு கீழ் மேற்கொள்ளப்படும் இதர செலவினங்களுக்கு ஆகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்

( ந.க.எண். 484/2023/அ1 )

**நகர்மன்ற தீர்மான எண்**: 696 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்** : 7வது வார்டு இடைக்காலத்தேர்தலுக்கு – பல்வேறு தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கு தொகை வழங்கிட மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 20**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்ய, ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள ரூ. 5.00 இலட்சம் செலவினத்தில் இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.531, நாள்.30.08.2024–ன்படி நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து, 03.10.2024–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.எல்.ஜி. அரசு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். 565 , நாள்.30.10.2024–ன்படி ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து, நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.864/2024/இ1, நாள்.03.10.2024–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் இப்பணிக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2025–வுடன் முடிவடைந்த நிலையில் குடிநீர் பணியின் அவசியம் கருதியும், தற்போது பணி மேற்கொண்டு வரும் திரு.எல்.ஜி. அரசு ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இதே ஒப்பந்த விலை விகிதத்தின் அடிப்படையில் 30.09.2025 வரை பணியினை தொடர பணி உத்திரவு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. காலநீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 697 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்** : காலநீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.
தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்ய, ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள ரூ. 5.00 இலட்சம் செலவினத்தில் இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.532, நாள்.30.08.2024–ன்படி நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து, 03.10.2024–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.எல்.ஜி. அரசு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். 565 , நாள்.31.10.2024–ன்படி ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து, நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.864/2024/இ1, நாள்.03.10.2024–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் இப்பணிக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2025–வுடன் முடிவடைந்த நிலையில் குடிநீர் பணியின் அவசியம் கருதியும், தற்போது பணி மேற்கொண்டு வரும் திரு.எல்.ஜி. அரசு ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இதே ஒப்பந்த விலை விகிதத்தின் அடிப்படையில் 30.09.2025 வரை பணியினை தொடர பணி உத்திரவு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. காலநீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 698 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: காலநீட்டிப்பு செய்யவும், செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 22**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பஞ்செட்டி சுடுகாடு சாலை தார்தளம் புதுப்பிக்க 15வது நிதிக்குழு மானியம் 2024-25 ( Untied Grant ) திட்டத்தில் பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 944/2023/A1 நாள் 06.02.2024ன் படி ஒப்பந்தபுள்ளி 23.02.2024 ல் பெறப்பட்டு இதே ந.க.எண் 944/2023 /A1 நாள் 01.03.2024 ல் குறைவு ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு M/s RDS & Co என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

பஞ்செட்டி சுடுகாடு அமைந்துள்ள பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பாதாள சாக்கடை அமைக்கும் பணியில் நீர் உந்து நிலையம் ( Collection Well and Puming Station ) அமைக்கும் பணிக்கு இப்பாதையின் வழியே பிரதான குழாய் ( Inlet and Outlet ) பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் இச்சாலை முற்றிலும் சேதமடைந்து மண் சாலையாக உள்ளது. மேலும் இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட சாலையில் இச்சாலைப்பணி தொடர முடியாததால் இச்சாலைக்கு பதிலாக பஞ்செட்டி சுடுகாட்டிற்கு செல்லும் எதிர்ப்புறம் உள்ள அப்துல்கலாம் நகர் 4வது தெரு சாலையினை தார்தளம் அமைக்கலாம். இம்மாறுதல் செய்வதாலும், இம்மதிப்பீட்டிற்குள் வருவதால் இந்த ஒப்பந்ததாரரை கொண்டு பணி செய்யலாம். இப்பணி திட்டப்பணி என்பதால் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு பணியின் அவசர அவசியம் கருதி பஞ்செட்டி சுடுகாடு சாலைக்கு பதில் அப்துல் கலாம் நகர் 4வது தெருவில் தார்ச்சாலை அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண் 944/2023/A1)

**நகர்மன்ற தீர்மான எண்**: 699 **நாள்**: 28.05.2025

**தீர்மானம்**: பஞ்செட்டி சுடுகாடு சாலைக்கு பதில் அப்துல் கலாம் நகர் 4 – வது தெருவில் தார்சாலை அமைக்க மன்றம் அனுமதி அளிக்கிறது. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 23**

